Under Section 173 BNSS

FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

(~~Under Section 154 Cr.P.C.~~)
(~~குற்ற நடைமுறை தொகுப்பு சட்டம் பிரிவு 154 இன் கீழ்~~)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8167272

1. District : மாவட்டம் Kallakurichi | PS: காவல்நிலையம் மாவட்ட ஊழல் தடுப்பு பிரிவு | Year: ஆண்டு 2025 | FIR No.: மு.த.அ. எண் 04 | Date: நாள் 16.05.2025

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption Act 2018 | Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 15.05.2025 | Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 12.00 | Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 16.05.2025 | Time : நேரம் 07.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் VOL-I | Time : நேரம் 07.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினி தட்டச்சு புகார் மனு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 70 கி.மீ. மேற்கு
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம், தொறவலூர் கிராமம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் P. வேலாயுதம் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் பெ. பழனை
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 68 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் விவசாயம் | (g) Address : முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   தனசேகர், கிராம நிர்வாக அலுவலர், தொறவலூர் கிராமம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   தாமதமில்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

இத்துடன் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ... Rank ... to take up the Investigation / Refused Investigation / transferred to PS. ... ...on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

16.05.2025 – 09.15hrs

Name: பெயர் ...
Rank: நிலை .... No. எண் ...

பணிந்துசமர்ப்பிக்கப்படுகிறது :

நான் இன்று 16.05.2025 ஆம் தேதி காலை 07.00 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் அலுவலில் இருந்த போது, கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வட்டம், தொரவளூர் கிராமம், எண்.118, ஆலமர தெரு என்ற முகவரியைச் சேர்ந்த பழமலை என்பவரது மகன் திரு.P.வேலாயுதம் என்பவர் நிலையம் ஆஜராகி கணினி தட்டச்சு செய்த புகார்மனு ஒன்றினை கொடுத்துக்கொண்டார் அதன் விவரம் பின்வருமாறு : அனுப்புநர் P.வேலாயுதம், வயது 68 த/பெ. பழமலை, எண்.118, ஆலமர தெரு, தொரவளூர் கிராமம், விருத்தாசலம் வட்டம், கடலூர் மாவட்டம் செல்: 9943630322. பெறுநர் காவல் , ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, கடலூர் மாவட்டம். அய்யா, நான் விருத்தாசலம் வட்டம், தொரவளூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு தொரவளூர் கிராம சர்வே எண்கள்.96/20A, 97/15B மற்றும் 97/7A2 –ல் 0-14.48 ஹெக்-ஏர்ஸ் நிலம் உள்ளது. இந்த நிலங்களுக்கான பட்டாவை எனது பெயரில் பட்டா மாற்றம் செய்துகொண்டேன். பட்டா மாற்றம் செய்யும் போதே, இந்த நிலங்களை அளந்து அத்து காட்டும்படி தொரவளூர் கிராம நிர்வாக அலுவலரான தனசேகர் என்பவரிடம் கேட்டேன். அதற்கு அவர் என்னிடம் நிலத்தை அளந்து அத்து காட்ட ஆன்லைனில் விண்ணப்பம் செய்துவிட்டு என்னை வந்து பார், உன் வேலையை நான் முடித்து தருகிறேன் என சொன்னார். அதன்படி நான் எனது நிலத்தை அளந்து அத்து காட்டி தரும்படி, அதற்கான அரசு கட்டணம் ரூ.2,460/- செலுத்தி கடந்த 15.03.2025ந் தேதி ஆன்லைன் மூலம் விண்ணப்பம் செய்தேன். அதன் பிறகு தொரவளூர் கிராம நிர்வாக அலுவலர் தனசேகர் என்பவரிடம் சென்று நான் ஆன்லைனில் விண்ணப்பம் செய்துள்ள விவரத்தை தெரிவித்தேன். அதற்கு அவர் நான் நிலத்தை அளந்துதர ஏற்பாடு செய்கிறேன் என சொல்லி நான் விண்ணப்பம்

16/5/25

செய்தற்க்குண்டான ஒப்புகை சீட்டை என்னிடம் கேட்டு பெற்றுகொண்டார். அதன் பிறகு, கிராம நிர்வாக அலுவலகம் சென்று தனசேகரை பார்க்கும்போது எல்லாம் நிலத்தை அளந்து கொடுக்க நான் ஏற்பாடு செய்கிறேன், இதற்காக நீ சர்வேயரை பார்க்க வேண்டாம் என்று சொன்னார். அதன் பிறகு, இரண்டு மாதங்கள் ஆகியும், எனது நிலத்தை அளந்து அத்து காட்டாமல் இருந்ததால், நேற்று 15.05.2025ந் தேதி பகல் சுமார் 12.00 மணியளவில் நான் தொரவளூர் கிராம நிர்வாக அலுவலகம் சென்று அங்கிருந்த கிராம நிர்வாக அலுவலர் திரு.தனசேகர் என்பவரை சந்தித்து, எனது நிலத்தை அளப்பது சம்மந்தமாக கேட்டேன். அதற்கு கிராம நிர்வாக அலுவலர் தனசேகர் "உன் நிலத்தை அளந்து கொடுக்கும் பொறுப்பு என்னுடையது, என் அலுவலகத்தில் உள்ள கிராம கணக்குகளை நான் கொண்டு வந்து கொடுத்து, நான் உடன் இருந்தால்தான், சர்வேயர் உனது நிலத்தை அளந்து அத்து காண்பிப்பார், சர்வேயர் புதுசு, அவருக்கு ஒன்றும் தெரியாது, நான் கிராம கணக்கில் உள்ள நில அளவு குறித்து சர்வேயருக்கு தெரிவிக்கவில்லை என்றால் உனது நிலத்தை அளந்து அத்து காண்பிக்க முடியாது" என்று சொன்னார். மேலும் தனசேகர் என்னிடம் உனது நிலத்தை அளந்து அத்து காண்பிக்க நான் ஏற்பாடு செய்கிறேன், நீ எனக்கு ரூ.10,000-ஐ எடுத்துக்கொண்டு வந்து என்னிடம் கொடு, உன் வேலையை உடனே முடித்து கொடுக்கிறேன் என்று சொன்னார். அதற்கு நான் அவரிடம் அரசுக்கு செலுத்த வேண்டிய பணம் ரூ.2460/-ஐ ஆன்லைனில் விண்ணப்பிக்கும் போதே செலுத்திவிட்டேன் என்று சொன்னேன். அதற்கு கிராம நிர்வாக அலுவலர் தனசேகர் என்னிடம், "நீ கட்டிய பணம் அரசுக்கு நான் கேட்கிற பணம் எனக்கு, நான் கேட்கும் பணத்தை கொடுக்கவில்லை என்றால் இப்போதைக்கு உனது வேலை முடியாது, உன்னுடைய விண்ணப்பம் ஏதாவது காரணம் சொல்லி தள்ளுபடி ஆகிவிடும் நீ மீண்டும் விண்ணப்பித்து அலைய வேண்டி

16/5/25

இருக்கும் அதனால் நான் கேட்ட ரூ.10,000/- பணத்தை நாளையே என்னிடம் கொடு, உடனே உனது வேலையை முடித்துக்கொடுக்கிறேன் என்று கறாராக சொல்லி என்னை அனுப்பிவிட்டார். பின்னர் நான் வீட்டிற்கு வந்து யோசித்து பார்த்ததில், கிராம நிர்வாக அலுவலர் தனசேகருக்கு லஞ்சம் கொடுத்து எனது நிலத்தை அளந்து கொள்ள எனக்கு விருப்பமில்லை. அதனால் இன்று 16.05.2025ந் தேதி நான் என்னிடம் லஞ்சம் கேட்ட கிராம நிர்வாக அலுவலர் தனசேகர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி புகார் மனு கொடுக்கிறேன். கிராம நிர்வாக அலுவலர் தனசேகர் கேட்ட லஞ்ச பணம்ரூ.10,000/- ஐ கொண்டு வந்துள்ளேன். இப்படிக்கு, ஒப்பம் (xxxxx) 16/05/2025.

Submitted, Received the above computer typed complaint on 16.05.2025 at about 07.00 hrs., a quiet and quick verification of the general reputation of the Public Servant complained against was made through sources and found to be genuine. The integrity and antecedents of the accused were also verified through sources and found to be bad. Hence, I registered a case in Cuddalore Vigilance and Anti-Corruption in Cr.No.4/2025, U/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 on 16.05.2025 at 08.30 hrs., sd/-xxxxx16/05/2025 (S.SUNDRARAJ), Inspector of Police, V & AC, Cuddalore.

இதன் அசலை வாதியின் புகார் மனுவுடன் இனைத்து கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி ஊழல் தடுப்பு வழக்குகள் நீதிமன்றம் அவர்களுக்கும், இதர நகல்களை உரிய அதிகாரிகளுக்கும் பணிந்து சமர்ப்பிக்கிறேன்.

(S.SUNDRARAJ)
Inspector of Police,
V & AC, Cuddalore.